## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 18/2019

பெயர் – தர்மலிங்கம்(வா.சா.1)

நாள் – 12.09.2025

**2 முதல் 8 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

1) நான் எல்லை பாதுகாப்பு படையில் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். எனது தாத்தா இறந்து 40 வருடங்கள் இருக்குமா என்றால் சரிதான். நான் பணி ஓய்வு பெற்று நான்கு ஐந்து ஆண்டுகள் இருக்குமா என்றால் 2011ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றேன். தாத்தா இறந்ததிலிருந்து நான் ஓய்வு பெற்ற வரை தாவா சொத்தை யாரும் அனுபவிக்கவில்லை என்றால் எனது சித்தி அனுபவித்து வந்தார். எனக்கு ஆடு மாடுகள் எதுவும் கிடையாது என்றால் இருந்தது, பாதை எதுவும் இப்போது இல்லை என்பதால் அதை விற்றுவிட்டோம்.

2) அசல் வழக்கில் 2 வது அயிட்ட சொத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் முதல் முறையாக தாக்கல் செய்யப்பட்டுள்ள பிராதில் தாவா சொத்து மட்டும் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். நீதிமன்ற அனுமதியுடன் பிராதை திருத்தம் செய்து தான் 2ம் இலக்க சொத்தை வழக்கில் காட்டியுள்ளேன் என்றால் சரிதான். எனவே தாவா 2 வது அயிட்ட சொத்து எந்த இடத்தில் இருந்தது என்பது குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. 2 வது அயிட்ட சொத்தை நான் பாதையாக அனுபவித்திருந்தால் ஆரம்பத்திலேயே பிராதில் காட்டியிருப்பேன், அவ்வாறு இல்லை என்பதால் தான் சீர்திருத்தம் செய்து 2 வது அயிட்ட சொத்தை இணைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

3) வா.சா.ஆ.1–ல் கிழமேல் கஜம் என்று கூறியுள்ள நிலையில் அதன் அளவுகள் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1ல் கூறிய சார்பதிவாளர் நகலை எடுத்து இதுகுறித்து நிரூபிக்க முடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்பட்டுள்ள கிழமேல் அளவுகள் பிராதில் கூறியவாறு இல்லை என்றும், வா.சா.ஆ.1ல் திருத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அனைத்து திசைகளிலும் வேலி போட்டார்கள் என்றால் சரிதான், எனது சொத்திற்கும் சேர்த்து போட்டார்கள்.

4) நீதிமன்ற ஆணையர் இரண்டு கல் தூண்களுக்கு இடையே வேலி போடவில்லை என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். வேலியை பிரதிவாதிகள் எப்போது போட்டார்கள் என்றால் நான் இந்த வழக்கை தொடுத்த பின்னர் தான் போட்டார்கள். வேலி போட்டதாக பிராதில் நான் கூறப்பட்டுள்ள நிலையில் தற்போது வேலியை நான் வழக்கு தொடுத்த பின்னர் தான் போட்டார்கள் என்று மேற்படி கூறியுள்ளது சரியல்ல.

5) ஊஞ்சம்பட்டி கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிற்கும் தனிதனி தண்ணீர் குழாய் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே சின்டெக்ஸ், தண்ணீர் போடும் குழாய் ஆகியவை உபயோகமில்லாமல் இருக்கிறது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும், ஓடைக்கும் இடையில் எவ்வளவு அளவுகள் இருக்கும் என்பது எனக்கு தெரியுமா என்றால் ஓடை பிரிவினை செய்யப்படவில்லை என்பதால் அதுகுறித்து எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கும், ஓடைக்கும் எவ்வளவு நீளம், அகலம் எவ்வளவு என்பது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியும், அதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) ஓடையின் அளவு குறித்தும், தாவா சொத்தின் அளவு குறித்தும், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர்களை விசாரித்தால் தெரியவரும் என்றால் சரிதான். மேற்படி கூறிய நபர்களை விசாரிக்க நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். நீ.ம.சா.ஆ.2 ஆன வரைபடத்தில் பாதை என்று சொல்லப்படும் இடத்தில் கழிப்பறை உள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) பிரதிவாதி சொத்தின் மேற்கே கிணற்றை சுற்றி தான் நான் பாதையாக அனுபவம் செய்து வந்தேன் என்றும், தற்போது பிரதிவாதி சொத்தை அபகரிப்பதற்காக இந்த வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்திற்கு சம்மந்தமப்பட்டவை இல்லை என்றும், அரசு நிலங்களை அபகரிக்க வேண்டி இந்த தவறான ஆவணங்களின் அடிப்படையில் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) தாவா சொத்தை நான் அனுபவிக்கவில்லை என்றும், பிரதிவாதியின் சொத்தை எப்போதும் பாதையாக அனுபவிக்கவில்லை என்றும், தவறாக இவ்வழக்கை தொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகவே இவ்வழக்கு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.